WA digital inclusion project

# கணினித் திறன் பயிற்சி – கடவுச்சொற்கள் மற்றும் ‘2 நிலை உறுதிப்பாடு’ (2 Factor Authentication)

## சமூக வெற்றியாளர் திட்டம்

2025

lotterywest

wacoss wa council of social service

# பயிற்றுநருக்கான குறிப்புகள்: கடவுச்சொற்கள் மற்றும் ‘2-நிலை உறுதிப்பாடு’ (2FA)

- பங்குபற்றுநர்களுக்காக இந்தக் கையேடுகளை அச்சிட்டுக்கொள்ளுங்கள்:
  - கடவுச்சொற்கள்
- இந்தப் பாடத்தை அளிக்கும் பொழுது உங்களுடைய பயன்பாட்டிற்காக இந்த ஒளித்-தகடுகளின் பிரதி ஒன்றை, குறிப்புகள் உள்ள பகுதியுடன் அச்சிட்டு வைத்துக்கொள்ளுங்கள்.
- வாசியுங்கள்:
  - இந்த ஒளித்-தகடுகளை வாசித்து அவற்றில் அடங்கியுள்ள விடயங்கள் உங்களுக்குப் பரிச்சியமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்,
  - பங்குபற்றுநர்களுக்கான கையேட்டினை வாசியுங்கள்.
- உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், அமர்விற்கு முன்பாக ‘எலியட்’ அவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள் Elliot@wacoss.org.au
- காட்சிப்படுத்துவதற்கு முன்பாக இந்த ஒளித்-தகட்டினை அகற்றுங்கள்/மறைத்துவையுங்கள். கடைசி ஒளித்தகட்டில் அடுத்த அமர்விற்கான நேரம்/திகதியைப் புதுப்பியுங்கள்
- உங்களுடைய சமூகத்தினர் கணினி அல்லது ‘ஃபோன்’களைப் பாவிக்கும் படங்கள் ஏதும் உங்களிடம் இருந்தால் இந்தப் படங்களில் எதற்கும் பதிலாக அவற்றை நீங்கள் பாவிக்கலாம்.

# இந்த நாட்டு பூமிக்காக பூர்வ பழங்குடியினருக்கு நன்றி நவிலல்

ஆபோரிஜினிப் பூர்வகுடி மக்களது நிலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை நாமறிவோம். இந்த நிலங்களைச் சேர்ந்த ஆபொரிஜினி மக்களுக்கு நாங்கள் மதிப்பு–மரியாதை செலுத்துகிறோம். ஆபொரிஜினிப் பூர்வகுடி மக்கள் பல ஆண்டுகளாக இந்த நிலத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றனர்.

ஆபொரிஜினிப் பூர்வகுடிகள் அனைத்தொர்ரையும் அவர்களது மூத்தொர்களையும் நாங்கள் மதித்து அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

அவர்களது கதைகளிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள இயலுமானது ஏராளமாகும்.

இந்த பூமி எப்போதுமே ஆபொரிஜினிப் பூர்வகுடியினருடையதாகவே இருந்துவந்திருக்கிறது, இனியும் அவ்வாறே நீடிக்கும்.

# கடவுச்சொற்கள் மற்றும் ‘2 நிலை உறுதிப்பாடு’ (2 Factor Authentication)

WA Digital Inclusion Project

# இந்த அமர்வின் மேலோட்டம்

இந்த அமர்வு பின் வருவனவற்றை உள்ளடக்கும்:

- கடவுசொற்கள் என்பன யாவை.
- வலுவான கடவுச்சொல் ஒன்றை உருவாக்குவது எப்படி.
- உங்களுடைய கடவுச்சொல்லைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
- . இரு–நிலை உறுதிப்பாடு (Two Factor Authentication).



# அறிமுகங்கள்

- குழுவினருக்கு உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்
- கடவுச்சொற்களைப் பற்றி உங்களுக்குள்ள அனுபவங்களை அமர்வில் உள்ளவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள் – இதைப் பற்றி நீங்கள் மேலும் தெரிந்துகொண்ட பிறகு உங்களுடைய கடவுச்சொற்களை மாற்றினீர்களா?



# கடவுச்சொற்கள் என்பன யாவை?



- ‘கடவுச்சொல்’ என்பது, உங்களுடைய இணைய-வழிக் கணக்குகளைப் பாதுகாத்துக்கொள்ளப் பயன்படுத்தப்படும் ஒரு **இரகசிய வார்த்தை அல்லது சொற்றொடர்** ஆகும்.
- **உங்களைப் பற்றிய தகவல்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள** இது உதவுகிறது.

# உங்களுடைய விசேட வார்த்தையா?




https://youtu.be/aHaBH4LqGsI?feature=shared&t=55
Watch from 0:55 - 3:42

# வலுவான கடவுச்சொற்களை உருவாக்கல்



- எழுத்துகள், இலக்கங்கள் மற்றும் குறிகளை ஒரு கலவையாகப் பாவியுங்கள்.
- உங்களுடைய பெயர் அல்லது பிறந்த நாள் போன்ற யூகிப்பதற்கு எளிதான தகவல்களைப் பாவிப்பதைத் தவிருங்கள்.
- **கடவுச்–சொற்றொடர்:** நினைவில் கொள்வதற்கு எளிதான, ஆனால் யூகிப்பதற்குக் கடினமான இன்னும் நீண்டதொரு வார்த்தைத் –தொடர்.
- வலுவான கடவுச்சொல் ஒன்றிற்கான உதாரணம்: "Table1Shirt2Flower!"
- கடவுச்–சொற்றொடர் ஒன்றிற்கான உதாரணம்: "SunnyBeach2025!"
- உதாரணத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ள இந்தக் கடவுச்சொற்களை உங்களுடைய சொந்த கடவுச்சொற்களாகப் பாவிக்காதீர்கள்.

# கடவுச்சொற்களை நினைவில் கொள்வதற்கான யோசனைக் குறிப்புகள்


- ஒரு செய்தி அல்லது சொற்றொடரை உருவாக்குங்கள்.

  உதாரணத்திற்கு, உங்களுடைய உள்ளூர்ப்-பகுதியிலுள்ள சமூக மையதிற்கு நீங்கள் செல்கிறீர்கள் என்றால், “Thecommunitycentrehasfreewifi” எனும் இந்த சொற்றொடரை நீங்கள் உருவாக்கலாம்.

  வலுவான கடவுச்சொல் ஒன்றிற்கான உதாரணம்: "C0mmun1tyC#ntr3h@sfreeWiFi”



# ‘இரு-நிலை அடையாள உறுதிப்பாடு’ (Two-Factor Authentication (2FA))



- 2FA எனப்படும் ‘இரு-நிலை உறுதிப்பாடு’ கூடுதல் பாதுகாப்புப் படுகை ஒன்றை உங்களுடைய கணக்குகளுக்குக் கொடுக்கிறது.
- உங்களுடைய கடவுச்சொல்லை நீங்கள் உள்ளிட்ட பிறகு உங்களுடைய ‘ஃபோன்’-இற்கு அனுப்பப்படும் குறியீடு ஒன்றைப் போன்ற இரண்டாவது படி-நிலை ஒன்று இதற்குத் தேவை.

# ‘இரு-நிலை அடையாள உறுதிப்பாடு’ (2FA) ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல்

- உங்களுடைய கணக்கின் ‘செட்டிங்க்ஸ்’-இற்குச் செல்லுங்கள்.
- பாதுகாப்பு அல்லது ‘2-நிலை உறுதிப்பாடு’ (2FA)-இற்கான தெரிவு இருக்கிறதா என்று பாருங்கள்.
- அதை ஏற்படுத்திக்கொள்ள கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.



# உபயோகமான வளங்கள்



வலுவான மற்றும் பாதுகாப்பான கடவுச்சொற்கள் / கடவுச்-சொற்றொடர்களை வைத்திருப்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, கையேட்டினைப் பாருங்கள், அல்லது பின் வரும் வலைப்பக்கங்களுக்குச் செல்லுங்கள்:

- https://goodthingsaustralia.org/wp-content/uploads/2024/05/smithfamily_strong_passwords.pdf
- https://www.cyber.gov.au/protect-yourself/securing-your-accounts/passphrases

# இந்த அமர்வைப் பற்றிய மீள்பார்வை



இந்த அமர்வில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் :

- வலுவான கடவுச்சொற்கள் மற்றும் ‘2-நிலை உறுதிப்பாடு’ (2FA) ஆகியன உங்களுடைய கணக்குகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகின்றன.
- வெவ்வேறு கணக்குகளுக்கு வெவ்வேறு கடவுச்சொற்களைப் பாவிக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- ‘2-நிலை உறுதிப்பாடு’ (2FA)-ஐ ஏற்படுத்திக்கொள்வதற்கான வசதி கிடைக்கும் பொழுது அதைச் செயல்படுத்துங்கள்..

கேள்விகள் ஏதும் உள்ளனவா?

# நன்றி!

அடுத்த அமர்விற்கான நேரம்:

WA
# digital inclusion
project

## நன்றி

## சமூக வெற்றியாளர் திட்டம்

*எழுத்துரையைச் சேர்க்க, சொடுக்குங்கள்*

lotterywest

wacoss wa council of social service